# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனவரி மாதம் நாடாளுமன்றுக்கு

## நீதி அமைச்சர் விஜயதாச தகவல்



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்தச் சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இந்தச் சட்டமூலத்துக்கு எதிராகக் குரல் எழுப்புவோர் உயர் நீதிமன்றத்தை நாடலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இருப்பினும், இதற்கு பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் வெளியானதை அடுத்து திருத்த முன்மொழிவுகள் கோரப்பட்டு, ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், அன்றையதினம் இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது, திருத்தங்கள் அடங்கிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஜனவரியில் சமர்ப்பிக்கவுள்ளதாக விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (04)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 07 வியாழக்கிழமை 28.12.2023 கதிர் 146



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு அரச கட்டிடங்களில் அடைக்கத் திட்டம்

'யுக்திய' எனும் நடவடிக்கையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் போதைவஸ்து கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், சிறைச்சாலைகள் நிரம்பி இடநெருக்கடி ஏற்பட்டுள்ளமையினால், காலியாக உள்ள அரச கட்டிடங்களில் கைதிகளை தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'யுக்திய' நடவடிக்கை தொடங்கியதிலிருந்து நாடு முழுவதும் உள்ள இருபத்தெட்டு சிறைகளில் இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்துக்கும் (2,250) மேற்பட்ட புதிய கைதிகள் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'யுக்திய' நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நாட்டின் சிறைச்சாலைகளில் இருபத்தெட்டாயிரம் (28,000) கைதிகள் இருந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்திருந்தார். பொதுவாக இந்நாட்டின் சிறைகளில் சுமார் 11,000 பேரை தடுத்து வைக்கக்கூடிய இட வசதியே உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை, பெண் கைதிகளின் எண்ணிக்கையும் 800 இலிருந்து 1,124 ஆக அதிகரித்துள்ளது. சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலுக்கு நீண்ட கால தீர்வாக மில்லனிய எனும் பிரதேசத்தில் ஐம்பது ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டு அங்கு கட்டிடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போதைய அவசர நிலவரத்தை கருத்தில் கொண்டே, 2➤

## கப்டன் விஜயகாந்த் மறைந்தார்! உலகத் தமிழர்கள் அஞ்சலி



தமிழகத்தின் புகழ்பெற்ற சினிமா நட்சத்திரமும் தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவருமான விஜயகாந்த் தனது 71 ஆவது வயதில் இன்று அதிகாலை காலமானார்.

ஈழத்தமிழர்களின் மீதும் அவர்களது விடுதலைப் போராட்டத்தின் மேலும் தீவிரப் பற்றுக் 2➤

## 70 மில்லியன் டொலர் காலாவதியான கொரோனா தடுப்பூசி மருந்துகளை கடலில் மூழ்கடிப்பதற்கு திட்டமாம்!

### 'மகென் ரட்டட்ட' அமைப்பு தகவல்

சுமார் 70 மில்லியன் டொலர் பெறுமதியான காலாவதியான பெருந்தொகை கொரோனா தடுப்பூசி மருந்துகளை அடுத்த இரண்டு வாரங்களுள் கடலில் மூழ்கடித்து அழிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக 'மகென் ரட்டட்ட' அமைப்பின் தலைவர் சஞ்சய மஹவத்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைப்பதற்குப் பதிலாக, அதிகாரிகள் அவரது வீட்டுக்குச் சென்று வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டமை தொடர்பில் பொதுமக்கள் என்ற ரீதியில் நாம் 2➤

## விஜயகாந்தின் மறைவுக்கு தமிழ்க் கூட்டமைப்பு இரங்கல்

தே.மு.தி.க. தலைவர் கப்டன் விஜயகாந்தின் மறைவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவர் கப்டன் விஜயகாந்தின் மறைவால் துயருறும் நம் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள், என்று அந்த இரங்கல் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## யாழ் பெரிய கடை வீதியில் இரண்டு கடைகள் தீக்கிரை



யாழ்ப்பாண நகரப் பகுதியில் பெரிய கடை வீதியில் உள்ள இரண்டு கடைகள் நேற்று இரவு (27) தீப்பற்றி எரிந்துள்ளன.

இதன்போது கடையில் இருந்த பெரும்பாலான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீப்பரவலை கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தனர். சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

## தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட்டது பொது துறைமுக ஊழியர் சங்கம் தெரிவிப்பு

இன்று முன்னெடுக்கப்படவிருந்த தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பொது துறைமுக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து இன்று தொழிற்சங்கப் போராட்டமொன்றை நடத்துவதற்கு அதன் உறுப்பினர்கள் திட்டமிட்டிருந்தனர்.

நேற்றையதினம் கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தடுத்து, துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கங்களுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

அதன் பின்னர், இன்றைய தினம் திட்டமிடப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தை தொழிற்சங்கவாதிகள் நடத்துவதற்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஆயினும், ஜனவரி 9 ஆம் திகதிக்கு பின்னர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தொழிற்சங்க உறுப்பினர்கள் உத்தேசித்துள்ளதாக பொது துறைமுக ஊழியர் சங்கத்தின் பிரதம செயலாளர் நிரோஷன் கோரகன குறிப்பிட்டுள்ளார்.

# கொவிட் பரவல் பற்றிய சுகாதார அமைச்சின் அறிக்கையில் திருப்தி அடைய முடியாதுள்ளது

## சுகாதார நிபுணர்களின் மருத்துவ சங்கம்

ஜேஎன் -1 கொவிட் திரிபு வகை குறித்து மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய மாதிரிப் பரிசோதனையின் முடிவுகளை மட்டும் நாட்டுக்கு முன்வைத்தால் போதாது என்று சுகாதார நிபுணர்களின் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

கொவிட் பரவல் தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பின்படி, தற்போது மருத்துவமனை மட்டத்தில் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் முறைமை தொடர்பில் திருப்தியடைய முடியாதுள்ளது எனவும் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. மேலும், மருத்துவமனைகளுக்கு வருகின்ற வர்களில் கொவிட் உள்ளவர்கள் அல்லது கொவிட் இல்லாதவர்களை அடையாளம் காண, தற்போது எந்த குறிப்பிட்ட சோதனை முறைகளும் அல்லது சோதனைகளை கோரும் முறைகளும் இல்லை எனவும் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

சுகாதார அமைச்சு ஆய்வுகளுக்காக மாதிரிகளை எவ்வாறு சேகரித்தது என்பதையும் அந்த ஆய்வின் முடிவுகள் தொடர்பான முழுமையான அறிக்கையை வெளியிடுமாறும் சங்கம் கேட்டுக்கொள்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளது. மக்களுக்கு மிகவும் முக்கியமான தொற்றுநோய் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடும் போது, அந்தப் பொறுப்பை ஏற்கக்கூடிய அதிகாரி ஒருவரின் கையொப்பத்துடன் அவற்றை வெளியிடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுகாதார நிபுணர்களின் மருத்துவ சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (ரெதி-35)

# குப்பை வரி திண்மக் கழிவு சேவைக் கட்டணம் நீக்கம்

(அஸ்ஹர் ஆதம்)

2024 ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் வகையில் குடியிருப்பு ஆதனங்களுக்கான குப்பை வரி திண்மக் கழிவு சேவைக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டும் நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியினால் மக்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை கருதியும் குறித்த வரி தொடர்பான நிதி முகாமைத்துவ மற்றும் சட்ட ரீதியான விடயங்களை கருத்தில் கொண்டும் கடந்த 3 வருடங்களாக குடியிருப்பு ஆதனங்களிலிருந்து ( வீடுகள், காணிகள்) கல்முனை மாநகர சபையினால் அறவிடப்பட்டு வந்த மேற்படி அறவீடு, 2024 இற்கான மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கான முகாமைத்துவக் குழு அங்கீகாரத்துடன் 2024 இலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

# கொவிட் - 19 தொற்றியோருக்கு பிந்திய காலத்தில் மாரடைப்பு வரும் சாத்தியம்

## ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

கொவிட் - 19 க்குப் பிந்திய காலத்தில் உலகளவில் மாரடைப்பு தாக்கம் ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதாக ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று எச்சரித்துள்ளது.

ஆய்வகத்தில் 'ஸ்டெம் செல் ' எனும் செயன்முறை மூலம் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையே, கொவிட் - 19 இன் திரிபான ஜேஎன் 1 தற்போது உலகின் பல நாடுகளில் பரவி வருகின்ற போதிலும், அதன் தாக்கம் குறித்து இன்னும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை,கொவிட் தாக்கத்தினால் உலகளாவிய ரீதியில் மாரடைப்பு தாக்கம் ஏற்படல் குறித்து ஜப்பானிய ஆய்வகங்களில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆய்வுகள் குறித்து தம்மால் எதுவும் கூற முடியாது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறை பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். (ரெதி-33)

### 70 மில்லியன் டொலர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலையடைந்துள்ளோம்.

கொரோனா காலத்தில் கொண்டுவரப்பட்ட சுமார் 700,000 தடுப்பூசி மருந்துகள் காலாவதியாகிவிட்டதாகவும், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சுமார் 70 மில்லியன் டொலர் மதிப்பிலான மேற்படி தடுப்பு மருந்துகளை கடலில் மூழ்கடித்து அழிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரெதி-31)

# உலகில் அதிகமாக டெங்கு நோய் பரவும் 30 நாடுகளில் இலங்கைக்கும் இடம்!

டெங்கு பரவல் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, உலகில் அதிக டெங்கு நோய் பரவும் 30 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்கியுள்ளது.

அந்த அறிவிப்பின்படி, இலங்கையை உள்ளடக்கிய தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள 11 நாடுகளில் 10 நாடுகளில் டெங்கு நோய் பரவுதல் பொதுவான ஒரு நிலையாக மாறியுள்ளது. அதில் இலங்கையும் உள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி, உலகில் அதிக டெங்கு நோய் பரவும் 30 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளமை போலவே இந்தியா, இந்தோனேசியா, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய ஏனைய ஆசிய நாடுகளும் இதில் அடங்குகின்றன.

2000 முதல் 2019 வரையிலான 19 ஆண்டுகளில், உலகெங்கிலும் உள்ள நாடுகளில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்தில் இருந்து 5.2 மில்லியனாக பத்து மடங்கு அதிகரித்துள்ளது என்றும் அந்த அமைப்பு கூறுகிறது. 2019 ஆம் ஆண்டளவில், டெங்கு நோய் உலகம் முழுவதும் 129 நாடுகளில் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெதி-34)

# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமனம்

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நீதியரசர் நீல் இத்தவல நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக செத்திய குணசேகர மற்றும் கே.பேரனட் ராஜபக்ஷ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான நியமனங்கள் 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (04)

### கப்டன் விஜயகாந்த் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட விஜயகாந்த் - தனது நூறாவது திரைப்படத்துக்கு கப்டன் பிரபாகரன் என்று பெயர் வைத்தவர்.

ஏழை எளியோருக்கும் பசி என்று வருவோருக்கும் அள்ளிக் கொடுக்கும் வள்ளலாகத் திகழ்ந்த அவர், அண்மைய சில வருடங்களாக உடல் நலக் குறைவினால் சிரமப்பட்டுவந்தார். சுவாசத் தொகுதியில் ஏற்பட்ட அழற்சி காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று அதிகாலை காலமானதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது இறுதி நிகழ்வுகள் நாளைய தினம் பூரண அரச மரியாதைகளுடன் இடம்பெறவுள்ளன. (04)

### கைதிகளின் எண்ணிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு சொந்தமான பாதுகாப்பான காலியாக உள்ள கட்டிடங்களில் சிறைகளில் இடவசதியின்றி உள்ள கைதிகளை அடைத்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ரெதி-32)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
மாலைக்கதிர் TV
மாலைக்கதிர் TV YouTube தளம்

# தாறுள் இல்மு கல்லூரி பட்டமளிப்பு விழா



(ஏ.எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தாறுள் இல்மு கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (27) மாலை நடைபெற்றது.

கல்லூரி முதல்வரும் கல்முனை கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமான ஆதம்பாவா றாஸிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச். றியாஸா, எல்சிபிசி நிறுவன பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.ஜவாஹிர் மற்றும் ஐசிஏஎம் அபாகஸ் நிறுவன பணிப்பாளர் திரு. ரீ.எம். ஷாபி ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஆங்கில எலகியுஸன், சிங்கள எலகியுஸன், சதுரங்கம், அபாகஸ் போன்ற பாடநெறிகளின் இறுதிப் பரீட்சைகளில் சித்தியெய்திய சுமார் 225 மாணவர்கள், அதிதிகளினால் விருதுகள், பதக்கங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்தியாவில் சென்னை நகரில் நடைபெற்ற சர்வதேச அபாகஸ் போட்டியில் வெற்றிபெற்று முதலாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்கள் உட்பட நான்கு மாணவர்களும் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற அபாகஸ் 7 ஆவது தேசிய மட்டப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் மற்றும் ஆறுதல் பரிசையும் வென்ற 38 மாணவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

அபாகஸ் பாடநெறியின் 5 மட்டங்களையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்த 17 மாணவர்களுக்கான பட்டமளிப்பும் இடம்பெற்றது.

## யாழ் மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்





யாழ்ப்பாண மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத்தலைவர் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், முப்படைகளின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் என பல்வேறுபட்ட துறைசார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். (O1)

## வளத்தாப்பட்டி பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

இணைந்த கரங்கள் அமைப்பினால் பழைய வளத்தாப்பிட்டி கமு.சது தமிழ் கலவன் பாடசாலை மற்றும் புதிய வளத்தாப்பிட்டி கமு.சது.ஸ்ரீ நாவலர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளில் உள்ள அதி கஸ்ட குடும்பங்களை சேர்ந்த 100 மாணவர்களுக்கு இன்றைய தினம் இணைந்த கரங்கள் அமைப் பினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் க. கணேஸ் தலைமையில் இன்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ. கஜரூபன், சி. காந்தன், ஆகியோரும் பழைய வளத்தாபிட்டி பாடசாலையின் அதிபர் திருமதி. பு. புஸ்பராணி மற்றும் இலங்கை விரிட்டிஸ் ஆங்கில கல்லூரி பணிப்பாளர் எஸ்.வினோகாந்த், பாடசாலையின் பழைய மாணவர் சங்க உப தலைவர் ரீ.காந்தன், பாடசாலை ஆசிரியர்களான வீ. கௌசல்யா, என். திவியோகராஜா, கே. நிலுஜா உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# உக்ரைனில் ரஷ்யா தாக்குதல் 6 பேர் உயிரிழந்ததாகத் தகவல்

உக்ரைனில் ரஷ்யா நடத்திய ஆளில்லா விமானம் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் 6 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்குப் பகுதி நகரமான கெர்சான் ரயில் நிலையத்தின் மீது ரஷ்யா சுமார் 50 ஆளில்லா விமான குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. ஈரானில் தயாரிக்கப்பட்ட ஷஹீத் ரகத்தைச் சேர்ந்த அந்த ட்ரோன்கள் விழுந்து வெடித்தபோது அந்த ரயில் நிலையத்தில் பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் இருந்தனர். இந்தத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். இது தவிர, சரமாரியான ட்ரோன் தாக்குதலில் கெர்சான் நகரில் மின்கட்டமைப்பு சேதமடைந்து பெரும்பாலான பகுதிகளில் மின்தடை ஏற்பட்டது, என உக்ரைன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, கெர்சான் பிராந்தியத்தில் ரஷ்யப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஒரு காவலர் உயிரிழந்து, 2 காவலர்கள் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிரீமியா தீபகற்பத்தில் அந்த நாட்டு கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்றின் மீது உக்ரைன் செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியது. இதில், அந்தக் கப்பல் சேதமடைந்ததாக ரஷ்யா கூறியது. மேலும், தாக்குதல் நடத்திய 2 உக்ரைன் போர் விமானங்களை தங்களது வான்பாதுகாப்பு ஏவுகணைகள் சுட்டுவீழ்த்தியதாகவும் ரஷ்யா கூறியது.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாகவே கெர்சான் பகுதியில் ஆளில்லா விமான குண்டுகள் மூலமாகவும், எறிகணைகள் மூலமாகவும் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படுகிறது.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவது தங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கூறி வருகிறது. எனினும், அந்த அமைப்பில் இணைவதில் தற்போதைய உக்ரைன் அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

இந்த நிலையில், உக்ரைன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்த ரஷ்யா, அந்த நாட்டின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக ரஷ்ய படையினரும், இழந்த பகுதிகளை மீட்பதற்காக உக்ரைன் ராணுவமும் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன. (04)

# காஸாவில் தரைவழித் தாக்குதல் விரிவாக்கம் இஸ்ரேல் ராணுவம் அறிக்கையில் தெரிவிப்பு



காஸாவில் தங்களது தரைவழித் தாக்குதலை மத்திய காஸாவை நோக்கி விரிவாக்கம் செய்வதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய காஸாவை நோக்கி தரைவழித் தாக்குதல் விரிவுபடுத்தப்படுகிறது. அங்குள்ள நகரப் பகுதி அகதிகள் முகாம்களை நேக்கி ராணுவ வீரர்கள் முன்னேறிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, காஸாவுக்குள் இஸ்ரேல் ராணுவத்தினருக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையே புதிய போர் முனைகள் உருவாகியுள்ளன.

முன்னதாக, காஸாவில் போர் பல மாதங்களுக்கு நீடிக்கும் என்று இஸ்ரேல் அரசு கூறியிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதற்கிடையே, இஸ்ரேலால் புதிதாக முற்றுகையிடப்பட்டுள்ள மத்திய காஸா பகுதிகளில் தொலைத்தொடர்பு சேவைகள் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாக காஸா தொலைத்தொடர்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஹமாஸ் அமைப்பினர், அந்த நாட்டுடன் அடிக்கடி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த மோதலின் உச்சகட்டமாக, கடந்த ஒக்டோபர் 7 இல் சரமாரி ஏவுகணைத் தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர்அந்த நாட்டுக்குள் தரை, கடல், வான்வழியாக நுழைந்து 1,200 க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்தனர் என்று கூறப்படுகிறது.

மேலும், அங்கிருந்து சுமார் 240 பேரை பிணைக் கைதிகளாக அவர்கள் பிடித்துச் சென்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டப்போவதாக சூளுரைத்த இஸ்ரேல், காஸா பகுதியை முற்றுகையிட்டு அங்கு வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது.

காஸாவில் இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21,110 ஆக அதிகரித்துள்ளது. இது குறித்து காஸா சுகாதாரத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் நேற்று வழங்கிய தகவலில், காஸா பகுதிகளில் இஸ்ரேல் படையினர் கடந்த ஒக். 7 முதல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 201,115 ஆக அதிகரித்துள்ளது. இது தவிர, இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 55,243 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 7 ஆயிரம் பேரைக் காணவில்லை, என்று குறிப்பிட்டுள்ளார். (04)

# ஏவுகணைச் செலுத்தியை வெற்றிகரமாக பரிசோதித்ததாக பாகிஸ்தான் அறிவிப்பு



பல ஏவுகணைகளை சரமாரியாக ஏவும் திறன் கொண்ட தனது பட்டா-2 சாதனத்தை பாகிஸ்தான் நேற்று வெற்றிகரமாக சோதித்துப் பார்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பாகிஸ்தான் ராணுவத்தின் மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பட்டா-2 ஏவுகணை செலுத்தியின் சோதனை புதன்கிழமை நடைபெற்றது. அதில் ஏவப்பட்ட ஏவுகணைகள் வெற்றிகரமாக செயல்பட்டன.

அதிநவீன மின்னணு சாதனங்களும் உயர்திறன் கொண்ட வழிகாட்டுக் கருவிகளும் அந்த ஏவுகணைத் தளவாடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

400 கிலோ மீற்றர் தொலைவு வரையிலான இலக்குகளை இந்த ஏவுகணைகள் மிகவும் துல்லியமாகத் தாக்கக் கூடியவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் இந்த ஏவுகணை சோதனையை நேரில் பார்வையிட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (04)

# பாகிஸ்தான் பேரவைத் தேர்தலில் போட்டியிடவுள்ள இந்துப் பெண்



ஆப்கன் எல்லையொட்டிய, பாகிஸ்தானின் பதற்றம் நிறைந்த கைபர் - பக்துன்கவா மாகாணத்தில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் பேரவைத் தேர்தலில் முதல்முறையாக இந்துப் பெண் ஒருவர் போட்டியிடவிருக்கிறார்.

சவீரா பிராஷ் என்ற அந்த 25 வயதுப் பெண் புனேர் மாகாணம், பிகே-25 தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளதாக அவரது தந்தை ஓம் பிரகாஷ் கூறியுள்ளார்.

இது தவிர, பெண்களுக்காக ஒதுக்கீட்டுத் தொகுதியான கேபிகே பேரவைத் தொகுதியில் போட்டியிடுவதற்காகவும் அவர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பை முடித்த சவீரா பிரகாஷ், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் புனேர் பகுதி மகளிர் அணி பொதுச் செயலராக இருந்து வருகிறார். (04)

# கொங்கோவில் கடும் வெள்ளம்




மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக 22 பேர் உயிரிழந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். கசாய் சென்ட்ரல் மாகாணத்தின் கனாங்கா மாவட்டத்தில் பல மணி நேரத்துக்குத் தொடர்ந்த கனமழை காரணமாக 22 பேர் உயிரிழந்ததாகவும், இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேரும் அடங்குவர் என்றும், அவர்களது இல்லத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே உயிரிழந்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனமழை காரணமாக கிழக்கு கொங்கோவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 20 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (04)

## மார்கழி இசை விழாவும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சியும்






மார்கழி இசை விழாவும் வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சியும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. வர்த்தகக் கண்காட்சியானது நேற்று புதன்கிழமை (27) காலை 10 மணியள வில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மார்கழி 27, 28, 29 ஆம் திகதிளில் மாலை 4.45 முதல் இரவு 9.15வரை மார்கழி இசைவிழா நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இசைவிழாவும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சியும் விற்பனையும் கொண்ட இந்த 3 நாள் நிகழ்வை இந்தியத்துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ் வணிகர் கழகம் இணைந்து யாழ் மத்திய கலாசார மண்டபத்தில் நடத்துகின்றன.

இந்நிகழ்வில் புகழ்பூத்த இலங்கைக் கலைஞர்கள், இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளார்கள். மேலும் தவில் நாதஸ்வர இசைச்சங்கமம், விரலோசை வயலின் கச்சேரி, நாதசங்கமம், விரலிசை கானம், நாட்டிய நாடகம், மற்றும் இந்தியக் கலைஞர்களின் பரதநாட்டிய நடன நிகழ்ச்சி, நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.



## அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸிற்கு பிரியாவிடை நிகழ்வு

(எம்.எம். றம்ஸீன்)

அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ் எம்.சப்ராஸ் புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியா செல்வதையிட்டு பிரியாவிடை நிகழ்வு ஒலுவில் கிறீன் வில்லா சுற்றுலா விடுதியில் நேற்று இடம்பெற்றது.

அம்பாரை கரையோர மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களின் ஏற்பாட்டில் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ நஜீம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

## மூதூர் அல்-மினா முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு



(எஸ். சினீஸ் கான்)

மூதூர் அல்-மினா முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அல்-மினா மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை (26) நடைபெற்றது.

மூதூர் அல்-மினா முன்பள்ளி பாலர் பாடசாலை ஆசிரியையின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்

இந்நிகழ்வில் முன்பள்ளி இணைப்பாளர் பௌமி, பாடசாலையின் அதிபர் றசீம், பிரதி அதிபர் நிஸார் மௌலவி, முன்பள்ளித் தலைவர் சாதிக், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், பிரதம அதிதியால் பாடசாலைக்கு சில உதவிகளும் வழங்கப்பட்டன.



# கிளிநொச்சி மாவட்ட வர்ண இரவுகள் விளையாட்டுத் துறை விருது நிகழ்வு




கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத் துறையில் சாதனை புரித்த வீர வீராங்கனைகளை கௌரவப்படுத்துவதற்கான வர்ண இரவு நிகழ்வு இன்று (28) வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கேதீஸ்வரன் அவர்களின் தலைமையில், மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தின ராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா கலந்து சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி தெற்கு வலையக்கல்விப் பணிப்பாளர் சி.கமலறாஜன் மற்றும் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.க சிவனருள்ராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கௌரவ விருந்தினர்களாக வட மாகாண விளையாட்டு திணைக்கள முன்னாள் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, வட மாகாண விளையாட்டு திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் கனகராஜா, National Masters & Seniors Athletics` போட்டியில் தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த ளு.அகிலத்திருநாயகி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது அதிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பண்டவாத்திய இசைக் கருவிகளுடன் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை, வரவேற்பு நடனம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் கலைநிகழ்வுகள், அதிதிகளின் உரைகள், அதிதிகளுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கல், வீரர்களின் விளையாட்டு அறிமுகம் முதலான நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேலும் இவ் விருது வழங்கும் நிகழ்வில் விளையாட்டுத் துறையில் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்த 12 வீர வீராங்கனைகளும், மாகாண போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்த 204 வீர வீராங்கனைகளும், பயிற்றுவிப்பாளர்கள் 16 பேரும் உள்ளிட்ட மொத்தமாக 232 பேர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக கிளைத் தலைவர்கள், பயிற்றுவிப்பாளர்கள், விழாவிற்கான நிதி அனுசரனையாளர்கள், உத்தியோகத்தர்கள், விளையாட்டுத் துறை வீர வீராங்கனைகள், பாடசாலை மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (02)

## புதிய அதிபர்கள் தெஹியத்தக்கண்டிய பிரதேச பாடசாலைகளுக்கு களப்பயணம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வியமைச்சினால் தரம் 3 அதிபர் சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிபர்கள் தங்கள் ஒருமாதகால சேவை முன் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான தெஹியத்தக்கண்டிய கல்வி வலயத்திற்குட்பட்ட ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளை தரிசிப்பதற்காக ஒரு நாள் களப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள் பாடசாலைகளில் அதிபர்களாக, பிரதி அதிபர்களாக மற்றும் உதவி அதிபர்களாக இடமமர்வதற்கு முன்னர் மாதிரி பாடசாலைகள் தொடர்பான கள விஜயமொன்றை மேற்கொண்டு, அதனூடாக குறித்த பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிற புதிய விடயங்களை அறிந்து கொண்டுள்ளனர்.

## கோட்டைக்கல்லாறு கடற்கரையில் கரை ஒதுங்கிய மர்மப் பொருள்



(அஸ்ஹர் ஆதம்)

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு கடலில் நேற்று (27) புதன்கிழமை மாலை மர்மப் பொருள் ஒன்று மிதந்துள்ளதை அங்குள்ள மீனவர்கள் அவதானித்துள்ளனர்.

இந் நிலையில் அப் பொருள் இன்று வியாழக் கிழமை (28.12.2023) காலை கரை ஒதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இப்பொருள் சிவப்பு நிறத்தில் கூம்பக வடிவில் போத்தல் போன்று பெரியதாக அமைந்துள்ளதுடன் பொருளின் மேற்பகுதியில பி.எம்.ரி. எனவும் பின்பக்கம் பி என்ற எழுத்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

இப்பொருளில் ஒருபக்கம் சிறிய ரக டயர் ஒன்று பொருத்தப்பட்டு அதில் இரும்பினாலான சங்கிலியும் பொருத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கரை ஒதுங்கியுள்ள பொருள் என்ன என்பது தமக்குத் தெரியாது, இதனை களுவாஞ்சிகுடி பொலிசாரும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் புல்மோட்டைப் பிரதே கடற் பகுதியிலும் இதுபோன்ற பொருள் கரை ஒதுங்கியதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# அம்பாறை மாவட்டத்தில் பலத்த மழையுடனான காலநிலை



(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக இம்மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கனத்த மழையுடன் பலத்த காற்றும் வீசி வருவதால், இம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

அதிக மழை காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட தாழ் நில விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இம்மாவட்டத்தின் தாழ்நில நெற்செய்கைகளுக்கும் பாரிய தேசங்கள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, பலத்த மழையுடனான காலநிலை காரணமாக உப உணவுப் பயிர்ச் செய்கைகளும் பாதிப்படைந்துள்ளன. சீரற்ற காலை நிலையால் அம்பாறை மாவட்டத்தில் அடிக்கடி மின்துண்டிப்பும் இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தின் கடற் பரப்பில் பலத்த காற்றுடனான மழை பெய்து வருவதனால் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இதன் காரணமாக இம்மாவட்டத்தில் கடற்றொழில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. கடற்றொழில் வெகுவாகப் பாதிபடைந்துள்ளமையால் கடல் மீன்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த 24 மணி நேரத்தில் இம்மாவட்டத்தின் பன்னலகல பிரதேசத்தில் 97.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் அம்பாறை மாவட்டத்தின் பாணம பகுதியில் 87.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், மகா ஓயா பகுதியில் 83.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் 74.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இங்கினியாகல பிரதேசத்தில் 65.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், எக்கல் ஓயாவில் 65.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், சாகாம பிரதேசத்தில் 60.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அம்பாறை பகுதியில் 56.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இலுக்குச்சேனையில் 56.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தீகவாபி பிரதேசத்தில் 53.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவிக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் கடற் கரையோரப் பகுதிகளில் மாலை வேளைகளில் வீசுகின்ற பலத்த காற்றின் காரணமாக சில பிரதேசங்களில் கடல் அலை சுமார் பத்தடிக்கு மேல் உயர்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

HappyMarket

Issue 27 December 2023

# BREAKING NEWS

## பிரமாண்டமான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்




## உங்கள் அல்லங்காடி கொண்டாட்டத்தில்

பிரமாண்டமான கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுடன் உங்களை சந்திக்க வருகின்றோம்.

டிசம்பர் மாதம்

**30ஆம், 31ஆம்**


திகதிகளில்



பி.ப 2:00-8:00 மணி வரை யாழ் கோட்டையில் (பண்ணை சுற்று வட்டம்) நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

Tourism Northern Province | synamon global | happymarket.lk | தமிழ் | காலைக்கதிர் | BirdFather | IDEA FACTORY




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2023இல் வெளியிடப்பெற்றது.